

> "அடுத்த தலைமுறைக்கு மினரல் வாட்டர் ஃபேக்டரியும் ஆக்ஸிஜன் பார்லரையும் ஆரம்பிச்சிக் கொடுக்கிறோம்..."

களா இருப்பாங்க. இருபது வருஷத்துக்கு முன்னாடி நம்ம தெருக்கள்ல இவ்வளவு குப்பை இருந்ததா? இப்படி குப்பைகள் பெருக என்ன காரணம்? பிளாஸ்டிக்!

நம்மளை சுத்தியிருக்கிற ஒவ்வொண்ணையும் பாருங்க... எல்லாத்தையும் நம்ம அடங்காத பேராசையால அசுரத்தனமா அழிச்சு சாப்டுட்டோம்! அடுத்த தலைமுறைக்கு மினரல் வாட்டர் ஃபேக்டரியும் ஆக்ஸிஜன் பார்லரையும் ஆரம்பிச்சிக் கொடுக்கிறோம். இது நல்லதாங்கிற கேள்விதான் என்னை இப்படியொரு முயற்சியில் ஈடுபட வைச்சது'' - ஆதங்கத்தோடு ஆரம்பிக்கிறார் கோவை அரசு போக்குவரத்துக் கழகத்தில் கண்டக்டராக இருக்கும் யோகநாதன்.

வார விடுமுறையாக கிடைக்கும் ஒரு நாளை தனக்காக ஒதுக்காமல், சூழலைக் காப்பதற்குச் செலவிடுகிறார் இவர். வெறும் பேச்சோடு நின்றுவிடாமல், மரம் நட்டு, பராமரிக்கும் வேலையையும் செய்கிறார். எந்தவொரு தொண்டு நிறுவனத்தின் பணம், பொருள் உதவியோ பெறாமல், சொந்தக் காசிலேயே செய்கிறார் யோகநாதன். இவர் நட்ட 20 ஆயிரம் மரக்கன்றுகள் இன்று நிழல் தர தொடங்கியிருக்கின்றனை.

"மரத்தை ஏன் நடணும், மரம் நடறதால நமக்கு வரப்போற நன்மைகள் என்னன்னு புரிய வைக்கிறேன். சும்மா பேச்சுவாக்கில சொல்லிட்டுப் போனா அவங்களும் கேட்டுட்டு கையை பலமாத் தட்டிட்டுப் போயிடுவாங்க. விஷயத்தை மூளையில பதிய வைக்கணுமே... அதுக்காக விஷுவலா பார்க்க வைக்கலாமேன்னு ஸ்லைடு ஷோ ஆரம்பிச்சேன்.

குழந்தைகளுக்கு நல்ல விஷயங்களை சொல்லித்தர இப்ப யாரும் இல்ல. எனக்கு குழந்தைங்க மேல பெரிய நம்பிக்கை இருக்கு. அதனாலதான் அவங்களைத் தேடிப் போறேன். இதுவரைக்கும் கிட்டத்தட்ட 1500 பள்ளி, கல்லூரிகள்ல ஸ்லைடு ஷோ பண்ணியிருக்கேன். பார்த்த ஆயிரம் பேராவது பிளாஸ்டிக் உபயோகிக்கறதை நிறுத்தியிருப்பாங்க'' - பெருமையோடு சொல்கிறார்.

இவரது இயற்கை ஆர்வம் இதோடு நின்றுவிடவில்லை. காடுகளில் சட்டவிரோதமாக மரம் வெட்டுவதை எதிர்த்துப் போராடுவது, சூழலைச் சுரண்டுபவர்கள் மீது வழக்கு தொடுப்பது என்று இவர் செய்யும் விஷயங்களின் பட்டியல் நீள்கிறது.

"மரத்துல ஆணியடிக்கிறது ஒரு வகையில ஸ்லோ பாய்சன் கொடுக்கறது போல... மெல்ல அந்த மரம் பட்டுப் போயிடும். அது தெரியாம மரங்களை விளம்பர போர்டுகள் மாட்டி வைக்கிறதுக்கான இலவச இடமாக்கிட்டோம். இதை தடுக்கறதுக்காக பி.எஃப். லோன் எடுத்து கோர்ட்ல கேஸ் போட்டிருக்காரு. கல்யாணத்துக்கு முன்னயிருந்தே இவர் இப்படித்தான். தெரிஞ்சுதான் அவரைக் கல்யாணம் பண்ணிகிட்டேன். அவர் செய்ற அத்தனை விஷயத்துக்கும் நாங்க பெருமையோடு ஒத்துழைக்கிறோம்'' என்கிறார் யோகநாதனின் மனைவி வளர்மதி.

"நிறைய மிரட்டல்களை தாண்டித்தான் இந்த விஷயங்களை செய்துகிட்டிருக்கேன். தொடர்ந்து செய்றதுக்கான ஊக்கத்தைக் கொடுக்கிறது குழந்தைங்கதான். அவங்க மனசுல நல்ல விதையை விதைச்சுட்டு வர்றேன். பலன் கண்டிப்பா கிடைக்கும்ங்கிற நம்பிக்கை நிறையவே இருக்கு'' என்கிற யோகநாதன், மகள்கள் மோனிஷா - சத்யப்ரியாவை கூப்பிட்டு பாடச் சொல்கிறார்...

***''என் பாட்டன் ஆற்றில் நீரைப் பார்த்தார்***
***தாத்தா ஆற்றின் கரையில் நீரைப் பார்த்தார்***
***அப்பா ஆற்றடி குழாயில் நீரைப் பார்த்தார்***
***நான் பிஸ்லரி பாட்டிலில் நீரைப் பார்த்தேன்***
***என் குழந்தை எதில் நீரைப் பார்க்கும்?''***

- கோரஸாகப் பாடும் இவர்களின் குரல் நம் செவிகளை எட்டுமா?!

- மு.வி.நந்தினி

படங்கள்: ரத்தன் குமார்



www.yogutree.com